பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 29 | திங்கட்கிழமை | 14.08.2023 | கதிர் 276

### 13ஐ அமுல்ப்படுத்த முயற்சிக்கும்

# சிங்கள அரசியல்வாதிகளின் புத்தி தெளிய வேண்டிப் பூசை

### நேற்று நடத்தினார் அபயதிஸ்ஸ தேரர்

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தினை அமுலாக்குவதற்கு முற்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சிங்கள அரசியல்வாதிகள் அதன் ஆபத்தைப் புரிந்துகொண்டு விரைவில் புத்தி தெளியவேண்டும் என்று பேராசிரியர் மெதகொட அபய திஸ்ஸ தேரர் வலியுறுத்தியுள்ளார். இதற்காக அவர் நேற்று விசேட பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டார். பெப்பிலியான சுனேத்ராதேவி பிரிவெனவில் இந்த விசேட பூஜைவழிபாடுகள் நடத்தப்பட்டன.**

**சிங்கள அரசியல்வாதிகளின் புத்தி தெளியவேண்டிநடத்தப்பட்டஇந்தபூசை வழிபாட்டில்சிங்களதேசியஅமைப்புகள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர,** ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்றுக்காலைஎனக்கொருதொலைபேசி அழைப்பு. நேற்றைய ''இனி இது இரகசியமில்லை'' பத்தியில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் சிலாகித்துக் கொண்டிருந்த நண்பர் ஒருவர், "அது சரி நீங்கள் நேற்று உதயங்கவை வைத்து ஜனாதிபதியின் எதிர்காலம் பற்றிச்சொல்லியிருந்தீர்கள். அவருடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் தான், என்றாலும் உங்கள் அனுமானத்தையும் பார்ப்போம்.. நான் ஒரு கேள்வி கேக்கிறேன் பதில் சொல்லுங்கள்" என்றார். நண்பர் பொடிவைத்துப்பேசுவதில் வல்லவர்.

"என்ன கேளுஙகோ?" என்றேன்.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் கதிரை என்ன விலை?" என்றார். இந்தமனுசன்என்னவில்லங்கமாகஇப்பிடிக் கேட்குதே என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் அவர் சொல்லப் போகும் விடயம் மட்டும் ஆழமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். உள்ளதை உள்ளபடி உளறச் செய்வதற்கு எங்களுக்குச் சொல்லியா தர வேண்டும்.நண்பர்சொல்லவரும்விடயத்தை அவர் வாயாலேயே எடுத்துவிடவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் நான் "ஏதுமறியாப் பிள்ளை போல "எனக்கென்ன தெரியும், நான் அந்தப் பக்கமே தலைவைக்கிற ஆள் இல்லை என்றது உங்களுக்குத் ☞ 2

## மன்னார் தொடருந்து சேவை மீள ஆரம்பிக்கப்படவில்லை

### இந்திரம் இல்லை என்பதே காரணமாம்

(ந.லோகதயாளன்.)

கொழும்பு-மன்னார்இடையேஇடம்பெற்று வந்த தொடருந்து சேவையை மீண்டும் தொடங்க இயந்திரம் இல்லை என்று கைவிரிக்கப்பட்டிருக்கின்றது.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு வரையில் இடம்பெற்ற தொடருந்து சேவை அநுராதபுரம் மதவாச்சி இடையிலான தொட ருந்துப் பாதைச் சீரமைப்புக் காரணமாக இடைநிறுத்தப்பட்டது. அதே ☞ 2

## ஒருமித்த நாட்டுக்கு எதிராகவே மக்கள் கோட்டாவுக்கு வாக்களிப்பு

### புது விளக்கம் சொல்கிறார் பேரா. சன்ன

'ஒருமித்தநாடு' என்ற கோட்பாட்டை தோற்கடிப்பதற்காகவேகோட்டாபயவுக்கு மக்கள் ஆணை கிடைத்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமான தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் ஆணை கிடைத்தமைக்கான காரணம் 'ஒருமித்த நாடு' என்ற கோட்பாட்டை தோற்கடிப்பதற்காகவே ஆகும்.

ஆனால், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஒருமித்த நாடு என்ற கோட்பாட்டை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்குரியநடவடிக்கையையே முன்னெடுத்து வருகின்றார்.

அதனொருஅங்கமாகவே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தினைமுழுமையாக முன்னெடுக்கும் செயற்பாட்டை ☞ 2

## கடன்மறுசீரமைப்பால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்து விடாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் வெற்றியடைவதால் மாத்திரம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. சரியான தீர்மானங்களுடன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளைபுனிததோமஸ் ஆண்கள் கல்லூரியின் 150ஆவதுஆண்டுவிழாவில் நேற்று முற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறுகுறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாத்தளைபுனிததோமஸ் கல்லூரி தொடங்கப்பட்டு 150 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இப்பாடசாலை நிறுவப்பட்ட போது இந்த நாடு பெருந்தோட்டப் பொருளாதாரத்தைக் கொண்டிருந்தது. கோப்பி பயிர்ச் செய்கை பெருமளவில் விரிவடைந்திருந்தது.

ஆனால் ஒரு சில வருடங்களில் கோப்பிப் பயிர்ச் செய்கை முற்றாக அழிவடைந்து பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து அரசுக்கு வருமானம் இல்லாமல் போனது. 15-20 வருடங்களின் பின்னர் தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படும் வரை நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ☞ 2

## 120 மருத்துவர்கள் அறிவிப்பின்றி நாட்டைவிட்டு வெளியேற்றம்

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் வெளிநாடுகளில் விசேட பயிற்சிகளை பெற்றுக்கொண்டு நாடுதிரும்பிய வைத்தியர்களில் 120 பேர் முன்னறிவிப்பின்றி உடன்படிக்கைகளை மீறி மீண்டும்வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்என்றுசுகாதார அமைச்சின் பணிப்பாளர்களில் ஒருவரான வைத்தியர் பிரியங்கர அத்தப்பத்து தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் வைத்தியர்கள் வெளிநாடுகளில் விசேடபயிற்சிகளுக்காகவோ நிபுணத்துவப் பயிற்சிகளுக்காகவோ செல்வது வழக்கமாகும். இவ்வாறு 2021 ஜனவரி முதல் 2023 ஜூலை வரையிலான ஒன்றரை ஆண்டுகளில் 363 வைத்தியர்கள்வெளிநாடுகளில் பயிற்சிகளுக்காகச் சென்று நாடு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு பயிற்சிக்காக செல்பவர்கள் மீண்டும் நாடு திரும்பி ஆகக்குறைந்தது எட்டுஆண்டுகள் உள்நாட்டில் சேவை வழங்க வேண்டும் என்பது அவர்களுடனான உடன்பாடாகும். அவ்வாறு உடன்பாட்டை மேற்கொண்டுள்ளபோதும் 120 வைத்தியர்கள் இதுவரையில் எவ்விதமான முன்னறிவிப்புக்களைச் செய்யாது நாட்டைவிட்டு மீண்டும் வெளியேறியுள்ளார்கள்.

அவர்களின்விபரங்களை திரட்டப்பட்டு, அரசசேவை ஆணைக்குழுவிற்கு ☞ 2

## பொதுப் போக்குவரத்து வாகன இறக்குமதி தடை உடன் நீக்கம்

### நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

பொதுப்போக்குவரத்துடன் தொடர்புடைய வாகன இறக்குமதிக்கான தடையை நீக்கி விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

கேகாலையில் நேற்று நடைபெற்றநிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாகன இறக்குமதி தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருக்கும்நிலையில்தற்போது பொதுப்போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இதற்கான உத்தியோக பூர்வமான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது. அதற்கு அமைவாக, பொதுமக்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் பஸ் வண்டிகள் அதேபோன்று சுற்றுலாப் பயணிகளின் பயணத்துக்காக பயன்படுத்தப்படும் சொகுசு பஸ்வண்டிகள் ஆகியனவற்றுக்கான இறக்குமதி அனுமதிவழங்கப்படவுள்ளது.

ஆத்துடன், பொருட்களை கொண்டு செல்வதற்காக பயன்படும் ☞ 2

## 13ஐ நடைமுறைப்படுத்துவது குறித்து பஸில் - ரணில் இடையே வேறுபாடு

### சொல்கிறார் ஐக்கிய மக்கள் சக்தி கம்பஹா எம்.பி.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம்தொடர்பில்ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுக்கும், பொது ஜன பெரமுனவின் நிறுவுனர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் இருவேறு நிலைப்பாடுகள் காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் காவிந்து ஜயவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து 13ஐ நடைமுறைப்படுத்துவது என்பது ஜனாதிபதிக்கு சிக்கலான காரியமாகவே இருக்கும். ஏனெனில், 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியும் பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவும் இரண்டு நிலைப்பாடுகளைக்கொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து 13ஐ நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடுமையாக பாடுபட நேரிடும். எனினும் 13 அரசியலமைப்பில் ஏற்கனவே உள்ளதொன்று என்பதால், அதனை நடைமுறைப்படுத்துவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைவரதும் கடமை - என்றார்.

## 39 லட்சம் பேருக்கு இன்னும் உணவுப் பாதுகாப்பில்லை

### ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறிக்கை

இலங்கையில் 3.9 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்கொண்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது, ஜனவரி 1 முதல் ஜூன் 30 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளை மையப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்களாவன:

10,000இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டுள்ளன. 2.9 மில்லியன் குழந்தைகள் உயிர்காக்கும் ஊட்டச்சத்து, சுகாதாரம், கல்வி, குடிதண்ணீர் , பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பை பெற்றுக்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன.

இவர்களுக்கு ☞ 2

## வங்கிக் கடன் வட்டி விரைவில் ஒற்றை இலக்கத்திற்கு வீழும்

### ஜனாதிபதி ஆலோசகர் சாகல தகவல்

வங்கிக் கடன் வட்டி வீதங்கள் விரைவில் ஒற்றை இலக்கமாக மாற்றமடையுமென ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி செயலகத்தின் பணிக்குழாம்பிரதானியுமான சாகல ரத்நாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற சிறு வணிக உரிமையாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களாக மாறுவதற்கு ஆர்வமுள்ளவர்களுக்கான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடு நெருக்கடியான காலக்கட்டத்தில்இருந்தபோது வங்கி வட்டி வீதங்கள் 34 சதவீதம் வரையில் உயர்ந்தன. தற்போது அந்த சதவீதங்கள் 16 முதல் 17 சதவீதமாகக் குறைந்துள்ளன. இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முழுமையான முயற்சியே காரணமாகும். விரைவில் அவை ஒற்றை இலக்கத்திற்குக் ☞ 2

## ஆபரணத்துறையை மேம்படுத்த திட்டங்கள் கேட்கிறார் ஜனாதிபதி

இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் சார் ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் வருடாந்தம் அதிக ஏற்றுமதி வருமானத்தை ஈட்டமுடியும்என்பதால், அந்த இலக்கை அடைவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் துறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் அபிவிருத்திக்கான வரிக் கொள்கைகள் தொடர்பான பரிந்துரைகளும் 'சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையானஅபிவிருத்திக்கான துறைசார் கண்காணிப்புக் குழு'வினால்ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை பாதிக்கும் வரிகள் மற்றும் ஏற்றுமதி, மீள்ஏற்றுமதி செயன்முறைகள்தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இத்துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும்உரியதரப்பினர் ஜனாதிபதியிடம்தகவல்களை முன்வைத்தனர்.

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடையவில்லை என்றும், வருடாந்தம் குறைந்தது இரண்டுபில்லியன்அமெரிக்க டொலர்களை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தெரியும் தானே'' என்று நழுவினேன்.

"ஐம்பதுலட்சம்பாருங்கோ" என்றார். "அதில பத்து லட்சம் அட்வான்ஸ்சும் குடுத்தாச்சாம்" என்றும் ஒரே போடாகப் போட்டார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்தக்கதிரைபெறுமதி இல்லாதது. தமிழ் மக்களின் பெறுமதி மதிக்கப்பட முடியாத பெரும் பொக்கிசங்களில் ஒன்றான உயர் கல்விப் பீடம், தமிழர்களின்வாழ்வுடன்ஒன்றித்துப் போன ஒன்று. நன்மையோ - தீமைய படித்தவர்கள் வழிகாட்டுவார்கள் என்று தமிழினமே நம்பியிருக்கும் அந்தக் கலைக் கூடத்தின் தலைமைக் கதிரைக்கு பெறுமதி போடலாமோ? சரி அப்படித் தான் என்றாலும் யார், யாருக்குக் குடுக்கிறது? என்றேன்.

"தம்பி,உமக்குத்தெரியாமல் இருக்காது" எங்கட காதுக்கு வந்த விசியம் உங்களுக்கு வராமல் இருக்காது. பெரிய இடத்து விவகாரம் நமக்கெதுக்கெண்டு நீங்கள் எல்லாம் பொத்திக்கொண்டிருக்கிறியள். பகைச்சுக் கொண்டால் பத்திரிகைக்கு விளம்பரம் வராது எண்டு பாக்கிறியள் போல..?'' என்றார்.

"உண்மையாத்தெரியாது.... தெரிஞ்சிருந்தா முதலிலேயே பிய்ச்சு உதறியிருப்பம் என்று உங்களுக்குத் தெரியும்தானே. துணைவேந்தரை நியமிக்கிற அதிகாரம் ஜனாதிபதிக்குத் தானே இருக்கிறது? அவருக்குயாரும் காசு கொடுத்த மாதிரி நான் கேள்விப்படேல்லையே.... கனக்க பெட்டிஷன்கள், ரெக்க மன்டேஷன்கள் போனதாக் கேள்வி, அதுதான் நியமனம் தாமதம் என்று நாங்கள் எழுதியும்இருந்தனாங்களே!" என்றேன்.

ஜனாதிபதிக்குஜம்பதுலட்சம் குடுத்தா துணைவேந்தர் பதவிகிடைக்குமோ! ஆனால் எப்பிடிக் குடுக்கிறது காசை என்றும் கேட்டு வைத்தேன். ''காசக் குடுத்தா உடன நியமனத்தைக் குடுக்க வேண்டியதுதானேபிறகென்னத்துக்கு இழுக்கினமாம்'' என்று நான் இழுத்தேன்.

"அதெல்லாம் இந்தச் செவ்வாய்க் கிழமை ரிசல்ட் வந்திடும். ஆனாஜம்பதுலட்சம் தந்தா அந்தக் கதிரையில உங்கள இருத்துறன் எண்டு, பஸ் வைச்சுருக்கிற அல்லக்கை சொன்னதை நம்பி அட்வான்ஸ்'பத்து' கை மாறினதாம் எண்டு கேள்வி. கை நீட்டிக் காசு வாங்கின அந்தக் "கொடை வள்ளல்" படைபல பராக்கிரமங்களும் இருக்கிற ஆள் எண்டிறதால நம்பிக்காசு குடுபட்டிருக்காம்.

துணைவேந்தர்தெரிவுக்கு முதல் நாள் வாக்களிக்கப் போற பெரும் சபை உறுப்பினர்களைத் தாஜா பண்ணவும், தாங்கள் சொல்லுறதைக் கேளுங்கோ எண்டு சொல்லி பிள்ளையளின்ர சங்கக் காரரை வழிக்குக் கொண்டு வாறதுக்குமாகத்தான் இந்த அட்வான்ஸ் எண்டு சொல்லியிருக்கிறார் அந்தக் "கொடை வள்ளல்".

எனக்கு முதலில அந்தக் கொடை வள்ளல் யார் என்று தெரிந்துகொள்வதில்தான் ஆர்வம்இருந்தது. நண்பரிடம் நேரிலேயே கேட்டேன். யாழ்ப்பாணத்தில ரெண்டு மூண்டு போர்தானே கொடை வள்ளல் என்று பேரெடுத்தவை, அவை உந்த வேலையளுக்குப் போற ஆக்கள் மாதிரித் தெரியேல்லையே எண்டன். "ஏன் மகா பாரதத்திலயும் கொடை வள்ளல் இருக்குத் தானே" எண்டார் நண்பர். மகா பாரதம் - படை பலம் எண்டு எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சுப் பார்க்கேக்க, அப்படிக்கருண காட்டின ஆள் யாராய் இருக்கும் எண்டது தெளிவாகியது. சிரித்துக் கொண்டேன்.

அந்தக் கருண காட்டிறவர் யார்? வேறு யாரெல்லாம் அவருடன் கூட்டு? என்பன பற்றி எல்லாம் இன்னுமொரு நாள் விளக்கமாகச் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

அதற்கு முன்னர் எனக்கு சில சந்தேகங்கள் உண்டு.

ஜனாதிபதி செய்கின்ற நியமனத்துக்காக - நூறு வீதம் ஜனாதிபதி மட்டுமே தனக்கிருக்கிற அதியுயர் அதிகாரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கக்கூடிய ஒரு விடயத்தை வைச்சு இங்க சிலர் காசு பாக்கினம் என்றது ஜனாதிபதிக்கு முதலில தெரியுமா?

பதவிக்கதிரைக்குவருவதற்காகப்பலலட்சங்கள் முதலிடப் படுகின்றன என்றால், பதவிக்கு வந்த பின்னர் அவை பல மடங்காகத் திரும்பக் கிடைக்கும் என்று நம்பித் தானே அதில் இப்படி முதலிட முடியும்? பல்கலைக்கழகத்தில அப்படிப்பட்ட வழி வகைகள் இருக்கிறதா? யாரோ ஒரு இடைத் தரகரை நம்பி இவ்வளவு பணத்தைக் கொட்டக்கூடிய "கெட்டித்தனத் துடன்தான்'' படித்தவர்கள் இருக்கிறார்களா?

என்னமோ நடக்குது எல்லாம் அந்தப் "பரமேஸ் வரனுக்கே" வெளிச்சம்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர் வசந்த பண்டார ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் குறித்த பூஜைவழிபாட்டின் பின்ன உரையற்றிய பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் மேற்கண்டவாறு தெரிவித்ததாவது: .

அரசமைப்பின் 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நாட்டுக்கு ஏற்படும் ஆபத்தை ஜனாதிபதி உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்துக் கொண்டு புத்தி தெளிய வேண்டும். இதற்கான விசேட பிரார்த்தனையை முன்னெடுத்துள்ளோம்.

இந்நிலைமைகள் நீடிக்குமாயின் நாடு பிளவடையும் ஆபத்து ஏற்படும் . ஆகவே, அரசியல்வாதிகள் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டும். அதன் ஊடாக நாட்டின் எதிர்காலப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அப்படியில்லைஎன்றால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரவேண்டி இருக்கும் - என்றார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவை ஆட்சிக்குகொண்டுவருவதில் முக்கிய பங்காற்றியவர்களில் பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரரும் குறிப்பிடத்தகுந்த ஒருவர்..

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப் பகுதியில் வவுனியா - அனுராதபுரம் பாதையும் சீரமைக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்திற்கான சேவைகளும் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

சீரமைப்புப் பணிகள் முடிந்து ஜூலை மாதம் முதல் யாழ்ப்பாணத்திற்கான சேவைகள் மீளத் தொடங்கப்பட்டுவிட்டபோதும் மன்னாருக்கான சேவைகள் தொடங்கப்படவில்லை.

மன்னாருக்கான சேவையை ஆரம்பிக்குமாறு கோரினால் அதற்கு இயந்திரம் இல்லை என்று தொடருந்துத் திணைக்களம் கைவிரித்துள்ளது. இலங்கையின் ஏனைய மாவட்டங்களிற்கு ஓடுவதற்கு உள்ள இயந்திரம் மன்னாரில் ஒரு சேவையைகூட வழங்க இல்லையா என்று மக்கள் கோருகின்றனர்.

இதுதொடர்பில் மாவட்டச் செயலர் அன்னம்மாள் ஸ.ரான்லி டிமெல்லை தொடர்பு கொண்டு கேட்ட போது,

தலைமன்னார்கொழும்பு தொடருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு வடமாகாண தொடருந்து நிலைய உதவி முகாமையாளருடன் தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்தேன். தற்போது இயந்திரங்கள் மிகவும் பற்றாக்குறையாக இருப்பதாகவும் விரைவில் இந்தியாவில் இருந்து 10 இயந்திரங்கள் தருவிக்கப்படவுள்ளதாகவும். அவை எமது கரம் கிட்டியவுடன் சேவையை ஆரம்பிப்பதாகவும் பதிலளித்தார் - என்றார்.

## 120 மருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில்அடுத்தகட்ட நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேநேரம், இவ்வாறு அறிவித்தலைச் செய்யாது நாட்டை விட்டு வெளியேறியுள்ளவைத்தியர்கள் தொடர்பில் அரச மருத்துவர்கள் சபையானது கறுப்புப் பட்டியலில்இடுதல்அவர்களின் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## பொதுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ட்ரக்மற்றும்லொறி ஆகியவற்றுக்கான இறக்குமதிகளுக்கான அனுமதியும் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இது முதற்கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளதோடு ஏனைய வாகன இறக்குமதி தொடர்பில் விரைவில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அந்நியச் செலாவணியின் இருப்பினைப் பாதுகாக்கும் முகமாக அரசாங்கம வாகன இறக்குமதிக்கான தடை அறிவிப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒருமித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துள்ளார். இந்த நிலையில் ஒருவிடயத்தினை தற்போது நினைவூட்ட வேண்டியுள்ளது.

ஜனாதிபதி பதவியில் ரணில் விக்கிரமசிங்க இருந்தாலும் அவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைவாகவே செயற்பட வேண்டியுள்ளது.

ஆகவே மீண்டும் ஒருமித்தநாடு கோட்பாட்டை முன்னகர்த்தாது அதனை கைவிட்டு செயற்படுவதே பொருத்தமானதாகும். அதற்கான ஆணையே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பெருந்தோட்டப் பயிர்களாக தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டதன்பின்னர், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்பியது. மாத்தளை புனித தோமஸ் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழா இன்று கொண்டாடப்படும் நிலையிலும், நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. கடந்த வருடம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், நாடு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்டது.

இந்த நெருக்கடியில் இருந்து மீண்டு வருவோம் என்று அப்போது யாரும் நம்பவில்லை. மஹிந்த ராஜபக் ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்த பிறகு அந்தப் பொறுப்பை ஏற்க யாரும் முன்வரவில்லை என்பது இதற்கு நல்லதொரு உதாரணம். பொதுவாக, ஏனைய சந்தர்ப்பங்களில், பிரதமர் பதவியை கைப்பற்ற வரிசையில் வருவார்கள். ஆனால் அப்போது யாரும் முன்வரவில்லை.

ஆனால் அந்தப் பின்னணியில் நான் ஜனாதிபதி பொறுப்பை ஏற்று, அமைச்சரவையை உருவாக்கி நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளைத் தேட ஆரம்பித்தேன். நாங்கள் எடுத்த தீர்மானங்களால், நாட்டில் அன்று இருந்த வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வர முடிந்தது. மேலும், கடந்த ஆண்டு செப்டம்பர், மற்றும் இந்தவருட ஜனவரி, ஏப்ரல் மாதங்களில் அரசாங்கம் என்ற முறையில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பலனை மக்கள் இப்போது அனுபவித்து வருகின்றனர்.

இந்த வருட இறுதிக்குள், கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் அதைச் செய்ய அரச செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அதேபோன்றுநாடுஉற்பத்திப் பொருளாதாரத்திற்கு மாறுவதும் அவசியம். அந்தத் திட்டத்தை தற்போது செயல்படுத்தியுள்ளோம்.

இன்று நாம் எடுக்கும் நடவடிக்கைகளால் நாடு 'வங்குரோத்தாகிவிட்டது' என்று குத்தப்பட்ட முத்திரையை அகற்ற முடிந்தாலும், அடுத்த கட்ட நடவடிக்கைகளைவிரைவில் எடுக்காவிட்டால் இன்னும் 10 வருடங்களில் மீண்டும் நாம் வங்குரோத்து நிலையை அடைவோம். எனவே புதிய பொறிமுறையின் மூலம் அரசாங்கத்தின் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

ஒரு வியாபாரத்தை நடத்துவது போன்ற நிதி ஒழுக்கம் இங்கு இருக்க வேண்டும்மற்றும்ஒவ்வொரு அரச நிறுவனத்திலிருந்தும் உச்ச பலன்களைப் பெற வேண்டும். தற்போது அமைச்சுகளின்தேவையற்ற செலவுகளைக்குறைக்கநாம் திட்டமிட்டுள்ளோம்.

மேலும், அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலம், கட்டிடங்கள், வாகனங்கள் தொடர்பான அறிக்கை தயாரிக்கும் பணிகள், பிரதமரின் செயலாளர் தலைமையில் நடைபெறுகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள் அந்தத் தகவல்களைப் பெற முடியும் எனநாம்எதிர்பார்க்கின்றோம்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் துரதிஷ்டவசமாக சிலர் நீதிமன்றம் சென்று இதைத தடுக்க முயன்றனர். அதன்போது முன்வைக்கப்பட்ட பிரதான பிரச்சினைதான், ஊழியர் சேமலாபநிதியம்தொடர்பான விடயம். ஆனால் தற்போது அனைத்து ஊழியர்சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கும் 9ூவட்டிவழங்குவதற்கான சட்டவரைவுசமர்ப்பிக்கப்பட்டு அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இந்தத் திட்டத்தை நிறுத்த எந்தக் காரணமும் இல்லை.

அரசமைப்பின் 4 ஆவது சரத்தின்படி, நிதி அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.எனவே, இந்தச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கேயன்றி வேறு எவருக்கும் இல்லை. மேலும், இது தொடர்பாக தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் தற்போது உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை நிறைவுசெய்த பிறகு, பொருளாதார வேலைத்திட்டத்தை நாம் சரியாக செயல்படுத்த வேண்டும். இன்று பலர் இந்த நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அவ்வாறு நாட்டைவிட்டுவெளியேறிய தொழில் வல்லுனர்கள் மற்றும் நிபுணர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, அந்த இடைவெளியை நம்மால் எளிதில் நிரப்ப முடியாது. எவ்வாறாயினும் அனைவரும் வாழக்கூடிய சிறந்த பொருளாதாரப் பின்னணியை இந்த நாட்டில் கட்டியெழுப்புவதற்கு நாம் இப்போது அர்ப்பணிப்புடன் உள்ளோம் என்றே கூற வேண்டும்.

அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருமானம், செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை, ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதிச் செலவு அதிகரித்திருப்பது இன்று நம் நாடுமுகங்கொடுக்கும்முக்கிய இரண்டுபிரச்சினைகளாகும். இதற்காக நாம் ஒவ்வொரு நாளும் கடன் வாங்க முடியாது.

கடன்மறுசீரமைப்புக்குப் பிறகு, மீண்டும் இந்தப் பிரச்சினைதோன்றும். அதை நாம் தடுக்க வேண்டும். அதற்கு மொத்தத் தேசிய உற்பத்தியை வேகமாக அதிகரிக்க வேண்டும். மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிக்கும்போது, நாட்டின் வருமானம் அதிகரிக்கும். மறுபுறம், ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தைநாம்செயல்படுத்த வேண்டியுள்ளது.

இன்று ஆளும் கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் சம்பிரதாயபூர்வமான அரசியல் கோஷங்களால் பயன் இல்லை. நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை ஆராய்ந்து தீர்வுகளுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அந்தத்தீர்வுகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால், பிரச்சினைகளைத் தீர்க்க மாற்று வழிகளை முன்வைக்க வேண்டும். இந்நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு வருடத்திற்கு குறைந்தது ஒரு பில்லியன் டொலர்கள் அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. தற்போதுள்ள துறைகளில் இருந்து அந்நியச் செலாவணியை அதிகரிப்பதுதான் முதலில் செய்ய வேண்டும்.

எங்களுக்குமுக்கியமாக வெளிநாட்டு தொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானமேஉள்ளது. இரண்டாவது ஏற்றுமதி வருமானம். ஆடைக் கைத்தொழில் என்று வரும்போது, குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளின் பொருளாதாரம் தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ளது. எனவே, இந்த ஆண்டு அந்தத் துறைகளிடமிருந்துஅதிகவருமானத்தை எதிர்பார்க்கமுடியாது. எனவே நாம் சுற்றுலாத்துறையில் கவனம்செலுத்த வேண்டும். எனவே, இந்த வருடமும், அடுத்த வருடமும், நாட்டின் சுற்றுலா வர்த்தகத்தில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

மேலும், நமது ஏற்றுமதி வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும். நாம் முதலீட்டாளர்களை வரவழைத்து அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அதற்காக துறைமுக நகரம் போன்ற புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்ப அறிவுடன், அடுத்த 10 ஆண்டுகளில் நாம் வேகமாக முன்னேற வேண்டும். அந்தவேகத்தைப் பொறுத்தே நாம் வெற்றி பெறுவோமா அல்லது தோல்வியடைவோமாஎன்பது முடிவு செய்யப்படுகிறது.

மேலும், அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக் கழகங்கள் பலவற்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தப் பல்கலைக் கழகங்களில் இணையும் மாணவர்களுக்கு மானிய ரீதியல் கடன் வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்த எதிர்பார்த்துள்ளோம். குறைந்தது 10,000 பொறியியலாளர்களும் 7,500 வைத்தியர்களும் இந்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் இருந்து வருடாந்தம் உருவாக்கப்பட வேண்டும்.

மேலும், தகவல் தொழிநுட்பத்திற்கும் அதிக தேவை உள்ளது. இந்தத் தேவைகள் தொடர்ந்தும்பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்குநல்லதொரு நாட்டைக்கட்டியெழுப்புவதே எமது தேவையாகும். அதனால் கடந்த வருடம் நடந்த விடயங்கள், இந்த நாட்டில்ஒருபோதும்மீண்டும் நடக் காத வகையில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது நம் அனைவரினதும் பொறுப்பாகும்.

அதற்கான பல புதிய நடவடிக்கைகளைஅரசாங்கம் எடுத்துள்ளது என்பதைக்கூற வேண்டும். முதலீட்டு சபை மற்றும்ஏற்றுமதிசபைஆகிய இருநிறுவனங்களிடமிருந்தும் எதிர்பார்த்த பயன்கள் கிடைக்கவில்லை. அதற்காக பொருளாதார ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு, குறித்த அதிகாரங்களை மையப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்போது ஒவ்வொரு அமைச்சுக்கும் சென்று முதலீடுகளுக்கு அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. அனைத்துப் பணிகளையும் ஒரே இடத்தில் நிறைவேற்றலாம்.

1978 இல் ஜே.ஆர். ஜெயவர்தன பெரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவை நிறுவி, பாரியகொழும்புஅபிவிருத்தித் திட்டத்தை இவ்வாறுதான் நடைமுறைப்படுத்தினார். மேலும், முதலீட்டுக்குத் தேவையானஉட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தனியான சபையொன்றை நிறுவ எதிர்பார்த்துள்ளோம். அத்துடன், வருடாந்தம் இந்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 25 இலட்சத்தில் இருந்து 50 இலட்சமாக அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம். இந்த மாத்தளை மாவட்டமும் சுற்றுலாத்துறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களில் விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கான விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை முன்வைக்க எதிர்பார்த்துள்ளோம். தற்போது நெல் மற்றும் ஏனையபயிர்களின்உற்பத்தி போதுமானதாக இல்லை. அந்த உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். மேலும், நாட்டிற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கு தொழில்நுட்ப மேம்பாட்டு சபையொன்றை நிறுவவும், டிஜிட்டல் மயமாக்கலை நாட்டிற்கு கொண்டுவர டிஜிட்டல் பரிமாற்ற ஆணைக்குழுவை நிறுவவும் நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். அதன் மூலம் நாட்டின் சகல துறைகளிலும் சிறந்த நவீனமயமாக்கலை எதிர்பார்க்கின்றோம், 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை உருவாக்குவதே எமது நோக்கம் ஆகும் - என்றார்.

## 39 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமான அடிப்படையிலான உதவி அவசியமாகவுள்ளதோடு கடந்த மே மாத நிலவரப்படி, நாட்டில் சுமார் 3.9 மில்லியன் மக்கள் மிதமான உணவுப் பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள மக்கள் கடுமையான உணவுப்பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுவதோடு, அதிகளவிலான குடும்பங்கள் சமூர்த்தி அல்லது ஊனமுற்றோர் நலன்கள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு திட்டங்களில் தங்கியுள்ளனர்.

நாட்டில் தற்போது பொருளாதாரம் ஸ்திரமற்ற தன்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றில் முன்னேற்றம் காணப்பட்டாலும், கடந்தமேமாதத்தில் 62 சதவீதமான குடும்பங்கள் சேமிப்பைத்திரும்பப்பெறுதல், கடன் வாங்குதல் மற்றும் கடனில்உணவைவாங்குதல் போன்ற வாழ்வாதார அடிப்படையிலான சமாளிப்பு உத்திகளையே கடைப்பிடித்தனர்.

இதேவேளை, 26 சதவீதமான குடும்பங்கள் நெருக்கடிநிலைமை மற்றும் வாழ்வாதாரத்தைசமாளிக்கும் உத்திகளைப் பயன்படுத்தி வருவதுடன், சொத்துக்களை விற்பனை செய்து அத்தியாவசிய தேவைகள் அல்லது கல்விச்செலவுகளைச்செய்து வருவகின்றன.

வறுமையான மக்கள் பிள்ளைகளை பாடசாலைகளிலிருந்து முழுவதுமாக இடைநிறுத்துதல், தமது பூர்வீக நிலங்களை விற்றல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் எனவும், இவ்வாண்டுஏப்ரல்மாதத்தில், ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 15.8 சதவீதமாககாணப்படுவதோடு இது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 13.1சதவீதமாக காணப்பட்டது என்றும் தெரிவித்துள்ளது.

## ஆபரணத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்காகக்கொள்ளத்திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிலை மேம்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம்உடனடியாக முன்வைக்கப்பட்டால்தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதாரவிவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும் சூழல், இயற்கை வளங்கள்மற்றும்நிலையான அபிவிருத்திக்கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் உட்பட துறைசார் நிறுவனங்களின் தலைவர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## வங்கிக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்படும்.

இதன்மூலம் தொழில் முனைவோர்கடன்பெறுவது எளிதாகும். அதன் பின்னர் வணிக உரிமையாளர்கள் மற்றும்தொழில்முனைவோர் தங்களின் வணிகத்தைக் கட்டியெழுப்பவோ அல்லது விரிவுபடுத்துவதற்கோ இலகுவான வழிகள் ஏற்படும் - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# தமிழருக்குத் தலை சிங்களவருக்கு வால் காட்டும் தந்திரம் மிக்க நபரே ரணில்

## ஐங்கரனேசன் காட்டம்



ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அரசமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதியாக அவர் கொண்டிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், மிகவும் நாசூக்காக நாடாளுமன்றத்துக்கு அதனைக் கொண்டு சென்றிருப்பதோடு 13 தொடர்பாக தமிழர் தரப்புக்குச் சாதகம் போலக் காட்டும் சில பரிந்துரைகளையும் முன்வைத்திருக்கிறார்.

ஆனால், இந்தப் பரிந்துரைகள் எதையும் சிங்களவர்கள் மிகப்பெரும்பான்மையாக உள்ள நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியாது என்று தெரிந்திருந்தும் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்றிருப்பது தமிழர்களுக்குத் தலையையும் சிங்களவர்களுக்குவாலையும்காட்டுகின்றஅவரின் விலாங்குத்தந்திரமேஆகும்என்றுதமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வது பற்றி ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருப் பது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைச்சட்டங்களில்உடனடியாகச் சில மாற்றங்களைச் செய்து விரைவில் மாகாணசபைத்தேர்தலைநடத்தவுள்ளார் என்ற தோற்றத்தைத் தனது நாடாளுமன்ற உரையின்போது வெளிப்படுத்தியிருக்கிறார்.

மாகாணசபைச் சட்டம் நடைமுறைக்கு வருவதோ, மாகாணசபைத் தேர்தல் நடைபெறப்போவதோ உடனடிச் சாத்தியம் இல்லாதவை. உள்ளூராட்சித் தேர்தலையேநடத்தவிடாமல், வேட்புமனுத் தாக்கல்செய்த பின்பும் பல தந்திரங்களைச் செய்து தேர்தலைக் காலவரையின்றி ஒத்திப்போட்ட ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைத் தேர்தலை நடத்துவார் என்று எதிர்பார்ப்பது அரசியல் அறிவிலித்தனம் மாகாணசபைச் சட்டங்களில் திருத்தங்கள் செய்துதமிழ்மக்களுடன்அதிகாரங்களைப் பகிர்வார் என்று நினைப்பது அதைவிட அறிவிலித்தனமானது.

ரணில் விக்கிரமசிங்க மாகாணசபை விவகாரத்தைக் கையிலெடுத்திருப்பதன் முதலாவது நோக்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு கோரும் இந்தியாவின் அழுத்தங்களில் இருந்து விடுபடுவதாகும். இரண்டாவது நோக்கம், ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடாத்தி அறுதிப் பெரும்பான்மையுடன் தான் ஜனாதிபதியாக நீடிப்பதை உறுதி செய் வதாகும்.

ரணில் தீர்வு தருவார் என்ற நம்பிக்கையைத் தமிழ்மக்களிடையே ஏற்படுத்தி அவர்களின் வாக்குகளைக் கபளீகரிப்பதும் மாகாணசபை விவகாரத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுசென்று அதனை நிறைவேற்ற முடியாமல் செய்வதன் மூலம் சிங்கள மக்களினது வாக்குகளை வாரிச் சுரட்டுவதுமே அவரது இலக்குகளாகும். தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தவிலாங்குத்தனத்தைப்புரிந்துகொள்ள வேண்டும். - என்றுள்ளது. (05)

# திருகோணமலையில் மீன்பிடிக்க கடலுக்கு சென்ற மீனவர் மாயம்

திருகோணமலைசீனன் வெளியிலிருந்து கடலுக்கு மீன்பிடிக்க வெள்ளிக்கிழமை மாலைசென்றமீனவர்ஒருவர் காணாமல் போயுள்ளார் என ஈச்சலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாட்டாளிபுரத்தைச் சேர்ந்த உதுமாலெப்பை முஸ்தபா என்ற மீனவரே காணாமல் போயுள்ளார்.

குறித்த நபர் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளார். இந்நிலையில், கடலுக்கு சென்றவர்சனிக்கிழமைவரை கரைக்கு திரும்பவில்லை.

அவரின் கையடக்க கைப்பேசிக்கு தொடர்பு ஏற்படுத்தியபோதும் அது இயங்காததையிட்டு அவரது உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் லங்காபட்டுண கடற்படை முகாமில் முறையிடப்பட்டுள்ளபோதிலும் கடற்படையினரிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என்றும் தம்மிடம் தேடுதலுக்கான படகுகள் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் தலையிட்டு குறித்த மீனவரை கண்டுபிடிக்க உதவ வேண்டும்எனஉறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



# கடலுக்குச் சென்று காணாமல்போனவரைத் தேடி தருமாறு தாய், மனைவி கண்ணீர்மல்க கோரிக்கை



கடந்த 4 ஆம் திகதி கடற்றொழிலுக்கென சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவரை கண்டுபிடித்து தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உதவுமாறும் காணாமல் போனவரின் தாயார் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப் பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும்தெரியவருவதாவது-

கடந்த 4 ஆம் திகதி கடலுக்கெனசென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை என்றும், அவரை கடத்தியதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், கடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஒருவரை நாகர்கோவில் பகுதியில் மடக்கி பிடித்த ஊரவர்கள் கடத்தல் தொடர்பில் ஒப்புக் கொண்ட நிலையில் அவரை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள தாயார் மேலும் அவருடன் சென்ற ஒருவர் கஞ்சா கடத்தல் தொடர்பில் கைதாகி இருக்கிறார்எனவும் தெரிவித்துள்ளார்.

தனது மகன் வீடு திரும்பாத நிலையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும்,பொலிஸாரும் அவரை தேடி வருவதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ள தாயார், அவரை மீட்டுத் தருமாறும், கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து ஒருவர் தொடர்பு கொண்டு காணாமல் போனவர் கஞ்சா கடத்தலிற்காக இந்தியா வந்தவேளைதவறியுள்ளதாக தெரிவித்ததாகவும் அன்றிலிருந்து அவ ரது தொலைபேசி செயற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (05)

# மட்டக்களப்பு வாகரையில் காணாமல்போன 4 சிறுமிகள் மீட்பு: சிறுவர்கள் இருவர் கைது

மட்டக்களப்பு வாகரையில் கடந்த வியாழக்கிழமை பாடசாலை ஒன்றில் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு செல்வதாக வீட்டை விட்டு வெளியேறியதையடுத்து, காணாமல்போன 13 வயதுடைய 4 சிறுமிகளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சுங்காங்கேணி பிரதேசத்திலுள்ள வீடொன்றில்வெள்ளிக்கிழமைபொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அத்தோடு, இதுதொடர்பில் 17 வயதான இரண்டு சிறுவர்களை கைது செய்துள்ளதாகவாகரைபொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய 4 சிறுமிகள் கடந்த வியாழக்கிழமை அந்த பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெறும் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு செல்வதாக வீட்டை விட்டு வெளியேறி வீடு திரும்பாததையடுத்து பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, பொலிஸார் விசாரணை மேற்கொண்ட நிலையில் வெள்ளிக்கிழமை வாழைச்சேனை சுங்காங்கேணி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 4 சிறுமிகளை மீட்டதுடன் 17 வயதுடையஇருசிறுவர்களை கைது செய்தனர்.

குறித்தசிறுமிகள்வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்றுவரும் நிலையில், சம்பவதினமான வியாழக்கிழமை அந்த பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெறும் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு செல்வதாகபெற்றோரிடம்தலா ஒவ்வொருவரும் 300 ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு அன்றைய தினம் வீட்டில் இருந்துவெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து, பாடசாலை சீருடையுடன் வீட்டில் இருந்து வெளியேறிய சிறுமிகள்வேறு ஆடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து பஸ்ஸில் ஏறி பாசிக்குடா சென்று கடலில் நீராடிய நிலையில், அங்கு நீராடிய சுங்காங்கேணியைச் சேர்ந்த 17 மற்றும் 16 வயது சிறுவர்களுடன் இரு சிறுமிகளுக்கும் இடையே காதல் ஏற்பட்டது.

இதனையடுத்து இரவாகிய தால்சிறுமிகள்வீடுசெல்லபஸ் இல்லாதகாரணத்தால்எங்கள் வீட்டிற்கு வந்து தங்கிவிட்டு காலையில் போகுமாறு காதலன்கள் சிறுமிகளை கோரியதையடுத்து 4 சிறுமிகளும் காதலன் ஒருவரின் வீட்டுக்குச் சென்று தங்கியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்ட இருசிறுவர்களையும் வாழைச்சேனை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சிறுமிகளை வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)



# தெற்கு கடலில் தீப்பிடித்த படகிலிருந்த 7 மீனவர்கள் கடற்படையினரால் மீட்பு!

இலங்கைக்கு தெற்கு ஆழ்கடல் பகுதியின் சுமார் 58 கடல் மைல் தொலைவில் மீன்பிடியில் ஈடுபட்டு கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தீப்பிடித்த பல நாள் மீன்பிடி படகில் இருந்த 7 மீனவர்கள் பாதுகாப்பாக இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் நாடளாவிய ரீதியில் உள்ள கடற்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் விசேட ரோந்து நடவடிக்கைகளின் போதே குறித்த மீனவர்கள் மீட்டுக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் அனைவரும் சனிக்கிழமை காலை காலி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

குறித்த 7 மீனவர்களும் ருஹுனு குமாரி 6 எனும் பல நாள் மீன்பிடி இழுவை படகு மூலம் கடந்த 08 ஆம் திகதி வென்னப்புவவிலிருந்து தொழில் நிமித்தம் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது இலங்கைக்கு மேற்கு கடற்பகுதியின், காலி கடல் பகுதியில் இருந்து சுமார் 107 கிலோமீற்றர் தொலைவில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது படகு தீப்பிடித்துள்ளது.

எவ்வாறாயினும், அனர்த்தம் தொடர்பில் குறித்த பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கை கடற் படைக்கு சொந்தமான கப்பல் மூலம் கடற் படை தலைமையகத்தில் அமைந்துள்ள கொழும்பு, கடல்சார் மீட்புஒருங்கிணைப்புமையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் விரைந்து நடவடிக்கை எடுத்தகடற்படையினர்கடற்படைக்கு சொந்தமான கப்பல் மூலம் பாதிக்கப்பட்ட மீனவர்களை தீப்பிடித்த படகிலிருந்து பத்திரமாக இடமாற்றம் செய்து, காலி துறைமுகத்துக்கு அழைத்து வந்துள்ளனர்.

மேலும் பாதிக்கப் பட்ட மீனவர்களுக்கு முத லுதவி சிகிச்சைகளும் அளிக்கப்பட்டுள்ளன. (05)

# 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தெற்கில் எதிர்ப்பை ஒன்றிணைப்போம்

## எச்சரிக்கிறார் கம்மன்பில



13 பிளஸ் என்ற நோக்கத்துடன் செயற்பட்டதால் தான் 2015 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை புறக்கணித்தார்கள். ஜனாதிபதியின் எதிர்கால ஜனாதிபதி கனவுக்காக 13 ஐ அமுல்படுத்த இடமளிக்க முடியாது. 13 இற்கு எதிராக தென்னிலங்கையில் எதிர்ப்பைஒன்றிணைப்போம் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரி வித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த புதிய சட்டத்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

நடைமுறை அரசமைப்பின் ஒரு திருத்தமாகவே 13 ஆவது திருத்தம் காணப்படுகிறது. ஆகவே புதிதாக சட்டத்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியஅவசியம் ஏதும் கிடையாது. 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்டு 13 பிளஸ் அமுல்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

விகிதாசார தேர்தல் முறைமையை இரத்து செய்வதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். விகிதாசார தேர்தல் முறைமையை இரத்து செய்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினத்தவர்களாக வாழும் சிங்களவர்கள் உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கான பிரதிநிதித்துவத்தில் பாதிக்கப்படுவார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள் குறித்து கவனம் செலுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கசிங்களவர்களைஇரண்டாம் பட்சமாக்கியுள்ளார்.

13 பிளஸ் என்ற நோக்கத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற் பட்டதால் நாட்டு மக்கள் அவரை 2015 ஆம் ஆண்டு புறக்கணித்தார்கள்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் 13 ஐ அமுல்படுத்த ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றிப்பெறா. ஆகவே 13 ஆவது திருத்தத்துக்கு எதிரான தென்னிலங்கையின் எதிர்ப்பை ஒன்றிணைப்போம். - என்றார். (05)

# அமெரிக்காவில் கற்கும் இலங்கை மாணவி தன் தாய்நாட்டு மாணவர்களுக்கு உதவி

பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள 5 பாடசாலைகளுக்கு, அமெரிக்க பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இலங்கை மாணவி ஒருவர் மடிக்கணினி மற்றும் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இலங்கை மாணவர்கள் பொருளாதாரச் சிரமங்களால் கல்விச் செயற்பாடுகளில் எவ்வாறு நெருக்கடிகளை சந்திக்கின்றார் என்பதை ஊடகங்கள் ஊடாகப் பார்த்த பின்னரே தாம் இதற்கான முயற்சியை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரவளையில் உள்ள 5 பாடசாலைகளுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான மடிக்கணினிகள் மற்றும் புத்தகங்களை அவர் வழங்கியுள்ளார்.

அமெரிக்க பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இலங்கை மாணவியான 17 வயதான செனுலி பீரிஸ் என்பவரே இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளார்.

பாடப் போட்டியில் முதலிடம்பெற்றதன் மூலம் பெற்ற 5 லட்சம் ரூபாவும், அமெரிக்க மாணவி ஒருவரிடமிருந்து பெறப்பட்ட மேலும் 5 லட்சம் ரூபாவும் சேர்த்து இந்த நன்கொடையை வழங்கியுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யானைகளைப் பாதுகாப்போம்

**ஒகஸ்ட் 12 உலக யானைகள் பாதுகாப்புத் தினம். அதாவது யானைகளின் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட நாள். நிலத்தின் பெரும் பாலூட்டியான யானைகள் உலகம் முழுவதும் ஆபத்துக்குள்ளாகி இருக்கின்றன. அவை மனிதர்களால் வேட்டையாடப்படுகின்றன அல்லது மனிதர்களுடனான மோதலால் கொல்லப்படுகின்றன. ஒரு காட்டின் பல்லுயிர் பேணுகைக்கு யானைகள் மிக முக்கியமானவை. அவற்றைக் கொல்வது இயற்கையின் சமநிலையைப் பாதிக்கும்.**

**ஆப்பிரிக்காவில் யானைகள் வேட்டையாடுவதற்கு முக்கிய காரணம் தந்த வியாபாரம். வடக்கு ஜிம்பாப்வேயின் மானா பூல்ஸ் தேசிய பூங்கா யுனெஸ்கோவின் உலக இயற்கை பாரம்பரிய தளம். ஆப்பிரிக்காவின் சிறந்த வனவிலங்கு பகுதிகளில் ஒன்று, அங்கு கூட்டத்தைவிட்டுத் தவறிவிடும் யானை ஒன்று எந்த நேரத்திலும் வேட்டையாடும் அபாயத்தில் உள்ளது.**

**இன்று உலகில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் அதிகரித்து வருகிறது. ஆபிரிக்க யானைகள் பலவும் அவற்றின் தந்தங்களுக்காகவே வேட்டையாடப்படுகின்றன. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால், பூமியின் மிகப்பெரிய நிலப் பாலூட்டியான ஆப்பிரிக்க யானை, அடுத்த 10 முதல் 20 ஆண்டுகளில் தீவிரமாக அழிவின் விளிம்பில் இருக்கும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.**

**அதைத் தடுப்பதும் காடுகளின் சமநிலையைப் பேணுவதும் மனிதர்களின் இன்றியமையாத கடமையாகின்றது.**

**இலங்கையில் யானை – மனித மோதலின் விளைவாக யானைகள் இறக்கின்றன. இந்த ஆண்டு இதுவரையில் அதிகளவில் யானைகள் இறந்திருக்கின்றன.**

**இலங்கையில் உள்ள யானைகள் ஆசிய யானை இனத்தின் கிளைகளில் ஒன்று. உருவில் பெரியவை. கருமையானவை. ஆனால் அவற்றின் வாழ்விடங்கள் தொடர்ந்து சுருங்கி வருகின்றன. மனிதர்கள் வளர்ச்சிக்காக காடுகளை அழிக்கிறார்கள். இதனால் யானைகளின் வாழிடங்கள் சுருங்குவதுடன் அவற்றின் இடப்பெயர்வுப் பாதைகளும் தடைப்படுகின்றன.**

**யானைகள் மனிதர்களைப் போலவே கூட்டம் கூட்டமாக வாழ்பவை. இலங்கையில் இத்தகைய ஒரு மந்தையில் 12–20 யானைகள் இருக்கும். மூத்த பெண் யானையால் இது வழிநடத்தப்படுகிறது. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து இலங்கையின் யானைகளின் எண்ணிக்கை சுமார் 65% குறைந்துள்ளது.**

**இன்று இலங்கை சட்டத்தின் கீழ் யானையைக் கொன்றால் தூக்குத்தண்டனை விதிக்கப்படுகிறது. ஆனாலும் காடுகளில் அவ்வப்போது யானைகள் சுட்டுக் கொல்லப்படுகின்றன. கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படுவதில்லை.**

**ஜூலை 30, 2015 ஐக்கிய நாடுகள் சபை வனவிலங்கு கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான முதல் உலகளாவிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது, 'வனவிலங்குகளின் சட்டவிரோத கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான தீர்மானம்' என்று அது பெயரிடப்பட்டது. 193 ஐ.நா. உறுப்பு நாடுகளும் வேட்டையாடுதல் மற்றும் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை விரிவுபடுத்த உறுதிபூண்டுள்ளன.**

**இரண்டு மாதங்களுக்குப் பிறகு, வேட்டையாடுவதை நிறுத்துவதற்கும் யானைகளைக் காப்பாற்றுவதற்கும் சர்வதேச முயற்சிகளின் ஒரு பகுதியாக, சீனாவும் அமெரிக்காவும் தங்கள் உள்நாட்டு தந்த வர்த்தகத்தை நிறுத்துவதாக உறுதியளித்தன.**

**டிசெம்பர் 30, 2016 அன்று, சீனா ஒரு வருடத்திற்குள் உள்நாட்டு தந்த வர்த்தகத்தை முற்றிலும் தடை செய்தது.**

**இத்தனை நடவடிக்கைகளுக்குப் பிறகும் அழிந்து வரும் யானை இனங்கள் முன்பு நினைத்ததை விட 100 மடங்கு வேகமாக அழிந்துவிடும் என்று சூழலியலாளர்கள் எதிர்வுகூறுகின்றார்கள்.**

**வேட்டையாடுதல், வாழ்விட அழிவு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற மனித நடவடிக்கைகள் அனைத்தும் இந்த அழிவுக்கு காரணமாகின்றன, யானைகளின் அழிவு மனிதர்களின் அழிவுக்கும் அடித்தளம் இடும் என்பதால் யானைகளைப் பாதுகாப்பது மனிதனின் பொறுப்பாகும்.**

# பாகிஸ்தான்; சபிக்கப்பட்ட பூமி

## ஒரு பிரதமர்கூட முழுமையாக ஆளவில்லை

ஐங்கரன் விக்கினேஸ்வரா



கிரிக்கெட் வீரராக இருந்து அரசியலுக்கு வந்த எழுபது வயதான இம்ரான் கான் 2018ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றியீட்டியபோதும் கடந்த ஆண்டு இடம்பெற்ற நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வி அடைந்து ஆட்சியை பறிகொடுத்தார்.

தற்போது பாகிஸ்தான் நாட்டின் பலம்மிக்க இராணுவத்துடனும் அவர் முரண்பட்டுள்ளார். ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டது தொடக்கம் இம்ரான் கான் மீது நூறுக்கும் அதிகமான குற்றச்சாட்டுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவை அனைத்தும் அரசியல் நோக்கம் கொண்டவை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டில் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தேசிய அளவில் ஆர்ப்பாட்டங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தனக்கு கிடைத்த பரிசுகளை விற்றதில் இருந்து கணக்கில் வராத பணத்தை சம்பாதித்த குற்றச்சாட்டில் இம்ரான் கானை குற்றவாளியாகக் கண்டுள்ளது பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம். இம்ரான்கான் குற்றச்சாட்டை மறுக்கிறார். மேன்முறையீடு செய்யப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### பாகிஸ்தான் அரசியல் படுகொலைகள்

பாகிஸ்தான் 1947 இல் சுதந்திரம் பெற்றதில் இருந்து பல அரசியல் படுகொலைகள், கொலை முயற்சிகள் மற்றும் தேசிய தலைவர்களின் சந்தேகத்திற்கிடமான சாவுகள் ஆகியவற்றை



ஏராளமாகக் கண்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டு பிரதமர்களின் பதவிக்காலம் முன்கூட்டியே எப்போதும் முடிகிறது என்பதும், அந்நாட்டின் 75 ஆண்டுகால வரலாற்றில் எந்தப் பிரதமரும் ஐந்தாண்டு பதவிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுச் சாதனை போல், அதிகபட்சமாக பாகிஸ்தானின் ஒரு பிரதமர் நான்கு ஆண்டுகள் மற்றும் இரண்டு மாதங்கள் ஆட்சி செய்திருக்கிறார். குறைந்தபட்சம் இரண்டு வாரங்களில் பாகிஸ்தானின் பிரதமர் ஒருவரின் ஆட்சி முடிவுக்கும் வந்துள்ளது.

### இம்ரான் கான் ஊழல்

இம்ரான் கான் பாகிஸ்தானின் சாதாரண அரசியல்வாதிகளைப் போல் இல்லை. அவர் ஒரு அசாதாரண சக்தியைப் பெற்றுள்ளார், அதை அவர் நன்றாகப் பயன்படுத்துகிறார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த வருட இறுதியில் வசிராபாத் நகரில் நடந்த பேரணியின் போது இம்ரான் கான் கொலை முயற்சியில் இருந்து சுடப்பட்டும் தப்பினார். ஆனால், உயர்மட்ட பாகிஸ்தான் தலைவர் ஒருவர் குறிவைக்கப்படுவது இதுவே முதல் முறையல்ல. அரசியல் படுகொலைகள் மற்றும் அதன் தேசியத் தலைமை மீதான தாக்குதல்கள் என்று வரும்போது பாகிஸ்தான் 75 ஆண்டுகளுக்கு முன்பு நாடு உருவாக்கப்பட்டதிலிருந்து ஒரு கொந்தளிப்பான வரலாற்றைக் கொண்டுள்ளது,

### 75 ஆண்டு நாடாளுமன்ற வரலாறு

பாகிஸ்தானின் நாடாளுமன்ற வரலாற்றில், மொத்தம் 29 பிரதமர்கள் ஆட்சி புரிந்து உள்ளனர். இவர்கள் யாருமே 5 ஆண்டுகள் பதவி காலத்தை முழுமையாக முடிக்கவில்லை.

1947ஆம் ஆண்டு முதல் பிரதமராக லியாகத் அலி கான் பதவியேற்றார். சுமார் 4 ஆண்டுகள் பதவி வகித்த அவர் படுகொலை செய்யப்பட்டார். அன்று முதல் இன்று வரை பிரதமர்களாக இருந்தவர்கள் ஊழல் குற்றச்சாட்டுகள், நேரடி ராணுவ புரட்சிகள் மற்றும் ஆளும் கட்சிகளில் ஏற்பட்ட உட்பூசல், கட்டாய ராஜினாமாக்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

நவாஸ் ஷெரீப் மட்டும் மூன்று முறை (1990, 1997, 2013) பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கின்னஸ் சாதனையாக 1993ஆம் ஆண்டு மட்டுமே 365 நாட்களில் 5 பிரதமர்கள் மாறி மாறி பதவியேற்றுள்ளனர்.

### முதல் பிரதமர் - லியாகத் அலி கான்

லியாகத் அலி கான், ஆகஸ்ட் 1947 இல் பதவியேற்ற பாகிஸ்தானின் முதல் பிரதமர் ஆவார். அவர் ஒக்டோபர் 16, 1951 அன்று ஒரு அரசியல் பேரணியில் படுகொலை செய்யப்பட்டார். அவரது பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் இரண்டு மாதங்கள் நீடித்தது.

பாகிஸ்தானின் சுதந்திர இயக்கத்தின் முக்கிய அங்கமாகவும், அதன் முதல் பிரதமராகவும் பணியாற்றிய லியாகத் அலி கான், ராவல்பிண்டியில் நடந்த அரசியல் பேரணியின் போது துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

சுல்பிகர் அலி பூட்டோ ஒகஸ்ட் 14, 1973 இல் பதவியேற்றார். அவர் ஜூலை 5, 1977 இல் இராணுவ புரட்சி மூலம் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். இறுதியில் சிறையில் அடைக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அவரது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் மற்றும் 11 மாதங்கள்.

### ஜெனரல் ஜியா உல் ஹக் ஆட்சி

முன்னாள் ராணுவதளபதி ஜெனரல் முகமது ஜியா உல்ஹக், ராவல்பிண்டியில் ஜூலை 5, 1977 அன்று ராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியதாக நாடு தழுவிய ஒளிபரப்பில் அறிவித்தார்.

1977ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய ஜெனரல் ஜியா உல் ஹக், 1988ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17ஆம் திகதி மர்மமான முறையில் விமான விபத்தில் உயிரிழந்தார்.

பாகிஸ்தானின் அப்போதைய ஜனாதிபதி மற்றும் இராணுவத் தளபதியுடன் இராணுவத்தின் உயர் மட்ட அதிகாரிகள் மற்றும் அமெரிக்காவின் பாக்கிஸ்தானுக்கான தூதுவரும் இந்த விபத்தின் போது உடனிருந்தனர். விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. சம்பவம் குறித்து விசாரித்த நீதித் துறை ஆணைக்குழுவின் அறிக்கை இன்றுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

### பர்வேஸ் முஷாரப் ஆட்சி

பர்வேஸ் முஷாரப் 1999இல் இரத்தமில்லாத இராணுவசதி மூலம் அதிகாரத்திற்கு வந்தார். அவரே பாகிஸ்தானின் நீண்டகால ஆட்சியாளர்களில் ஒருவராக இருந்தார். 2001 முதல் 2008 வரை அதன் அதிபராக பணியாற்றினார்.

அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தனது பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஆதரவளிப்பதாக அறிவித்த பிறகு, அவர் பல கொலை முயற்சிகளை எதிர்கொண்டார்.

### பெனாசிர் பூட்டோ மீதான தாக்குதல்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவின் மகள் பெனாசிர் பூட்டோ இரண்டு தாக்குதல்களை எதிர்கொண்டார்.

பெனாசிர் பூட்டோ, கொல்லப்பட்ட பிரதமர் சுல்பிகர் அலி பூட்டோவின் மகள், முஸ்லிம் நாட்டின் முதல் பெண் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர் டிசெம்பர் 2, 1988 இல் பதவியேற்று ஊழல் குற்றச்சாட்டின் பேரில், அவரது ஆட்சி ஒகஸ்ட் 6, 1990 அன்று பதவி நீக்கம் செய்யப்பட்டது. அவரது பதவிக்காலம் மூன்றாண்டுகள் மற்றும் சில நாட்கள் வரை நீடித்தது.

140க்கும் மேற்பட்ட உயிர்களைக் கொன்ற தாக்குதலில் பூட்டோ காயமின்றி இருந்தார். ஆனால் அவர் இரண்டு மாதங்களுக்குப் பிறகு டிசெம்பர் 27, 2007 அன்று ராவல்பிண்டியில் ஓர் அரசியல் பேரணியில் திட்டமிட்டுக் கொல்லப்பட்டார்.

### பதவியில் நவாஸ் ஷெரீப்

1997 பெப்ரவரி 17 இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்தார் நவாஸ் ஷெரீப். பாகிஸ்தான் வரலாற்றில் 3வது முறையாக 1999 ஒக். 12 ராணுவ சதிப்புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்டார். அவரது பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் எட்டு மாதங்கள் நீடித்தது. ஜூன் 5, 2013 அன்று ஷெரீப் மூன்றாவது முறையாக பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜூலை 28, 2017 அன்று சொத்து தகவல்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றத்தால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவரது பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் இரண்டு மாதங்கள் மட்டுமே நீடித்தது. இதே போல் யூசப் ரசா கிலானி மார்ச் 25, 2008 அன்று பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் 2012 இல் பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றத் தால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். அவரது பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் மற்றும் ஒரு மாதம்.

### சுதந்திரம் போராடி பெற வேண்டுதல்

தற்போது ஊழல் குற்றச்சாட்டில் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தேசிய அளவில் ஆர்ப்பாட்டங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின் இம்ரான் கான் தனது லாகூரில் உள்ள வீட்டில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளார். இந்தத் தீர்ப்புக்கு எதிராக போராடும்படி ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

''வீட்டில் அமைதியாக இருக்க வேண்டாம் என்ற ஒரே ஒரு கோரிக்கையையே நான் விடுக்க விரும்புகிறேன்" என்று கைதாவதற்கு முன்னர் ட்விட்டர் என்று அழைக்கப்பட்ட எக்ஸ் சமூக தளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். "உங்களினதும், நாட்டினதும், உங்களின் பிள்ளைகளினதும் எதிர்காலத்திற்காகவே நான் போராடுகிறேன்'' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்பு அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தற்கு எதிராக நாட்டில் பெரும் பதற்றமும் கொந்தளிப்பும் ஏற்பட்டது. இந்நிலையில், இம்ரான் கான், யூடியூப் வாயிலாக தனது ஆதரவாளர்களுக்காக காணொளி ஒன்றைப் பதிவேற்றியுள்ளார். அதில், சுதந்திரம் எளிதாகக் கிடைத்து விடாது. அதை நாம் தான் போராடிப் பெற வேண்டும். சுதந்திரத்தைப் பெறுவதற்கு நீங்கள் தியாகம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். அனைவரும் உங்களின் சொந்த ஊர்களின் தெருக்களின் முனையில் போராட்டத்தில் ஈடுபடவேண்டும் என்று அவர் அந்த காணொளியில் கேட்டுக்கொண்டுள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஏ 9 பிரதான வீதியில் விபத்து யாழ். இந்து மாணவன் சாவு

தென்மராட்சிசாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ 9 பிரதான வீதியில் கைதடி நுணாவில்வைரவ கோவில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. மாட்டு வண்டி சவாரி போட்டிக்காகவண்டில்மற்றும் மாடுகளை ஏற்றிச்சென்ற லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியது. இந்த விபத்தில் யாழ்.இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் கண்டுவில் வீதி சாவகச்சேரியை சேர்ந்த 19 வயதான சிவபாலன் பிரவீன் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற நிலையில் உயிரிழந்தவரின் உடல் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(05)

# கட்டுநாயக்க விமானப்படை முகாமில் உறங்கியவரின் தங்க நகை திருட்டு!

கட்டுநாயக்க விமான நிலைய விமானப்படை முகாமில் உறங்கிக்கொண்டிருந்த விமானப்படை வீரர் ஒருவரின் தங்க நகை திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலி-ஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

படைமுகாமில் உறங்கிக்கொண்டிருந்த அவரது தங்க நகையை யாரோ திருடிச் சென்றுள்ளதாக விமான நிலைய பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(05)

# ரணிலின் முயற்சிகளுக்கு எதிராக கோட்டா குரல் கொடுக்கவேண்டும்

## சன்ன ஜயசுமன கோரிக்கை



13ஆவதுதிருத்தத்தை நடைமுறைப்படுத்து-வதற்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முயற்சிகள்தொடர்பாக கோட்டாபயராஜபக்ஷ தொடர்ந்தும் அமைதி யாக இருக்கக் கூடாது என ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த முயற்சிகளை மீண்டும் கடுமையாக கண்டித்துள்ள சன்ன ஜயசுமன, தேசத்தின் நலன்களுக்குபாதகமான விதத்தில் இந்த அரசாங்கம் செயற்பட முயல்வதால் கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

2019 நவம்பரில் கோட்டாபயராஜபக்ஷ வென்றஐந்து வருட பதவிக்காலத்தை பூர்த்திசெய்வதற்காக நாடாளுமன்றம் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தது என்றும் சன்ன ஜயசுமன சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியை பிரதிபலிக்கும் புதிய அரசமைப்பு என்ற வாக்குறுதியின் அடிப்படையில் கோட்டாபயராஜபக்ஷ வெற்றிபெற்றார்என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே அந்த ஆணையை ஒற்றையாட்சியை இல்லாமல் செய்வதற்காக பயன்படுத்தப்படும்போது முன்னாள் பாதுகாப்பு செயலாளர் எவ்வாறு மௌனமாக இருக்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயத்தில் கோட்டாபய ராஜபக்ஷ மௌனம்காப்பது தற்போதைய நிகழ்ச்சி நிரலுக்கு அவர் மறைமுக ஆதரவு என்ற தவறான கருத்தை ஏற்படுத்தலாம் என்றும் சன்ன ஜயசுமன குறிப்பிட்டுள்ளார். (05)

# சிறுமிகளிடம் பாலியல் சில்மிசம் அல்லைப்பிட்டி இளைஞர் கைது

யாழ். அல்லைப்பிட்டி பகுதியில் சிறுமிகளை பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்திய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேகநபர் அல்லைப்பிட்டி பகுதியை சேர்ந்த 25 வயதான இளைஞர் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரிய-வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும்தெரியவருவதாவது-

அண்மையில் யாழ். வைத்தியசாலையில்அதிகளவு மாத்திரைகளைஉட்கொண்டு தற்கொலைக்கு முயன்ற அல்லைப்பிட்டியைசேர்ந்த11வயது சிறுமி காப்பாற்றப்பட்டார்.

இந்நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட உளவள சிகிச்சையின் பொழுது அல்லைப்பிட்டி வெண்புறவி நகர்பகுதியைச் சேர்ந்த 25 வயதானஇளைஞர்தொடர்பில் சிறுமி தகவல் வெளியிட்டார்.

தான் உட்பட்ட ஐந்து சிறுமிகளுக்கு தொலைபேசி மூலம் தகாத குறுஞ்செய்திகளை அனுப்பிய நிலையில் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கியதன் காரணமாக தற்கொலைக்கு முயன்றதாக வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் வைத்தியசாலைமூலம்ஊர்காவற்றை பொலிஸாருக்கு தகவல் வழங்கபட்ட நிலையில் ஊர்காவற்றை பொலிஸார் விசாரணைகளைஆரம்பித்திருந்தனர். இதனையடுத்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாவது சிறுமியை சட்ட வைத்திய அதிகாரி முன் பொலிஸார் முற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த சிறுமி வழங்கிய வாக்கு-மூலத்துக்கு அமைவாக பாலியல் தொந்தரவை மேற்கொண்ட 25 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மற்றுமொரு சிறுமியும் குறித்த சந்தேகநபரால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகிய நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள பாதுகாப்புக் கருவிகள் திடீரென அகற்றல்

கட்டுநாயக்க விமான நிலைய நுழைவு முனையத்தில் இருந்த ஸ்கேனர்கள் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு சோதனை இயந்திரங்களும் திடீரென அகற்றப்பட்டுள்ளதெனதகவல் வெளியாகி உள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் முறையான ஆய்வு இல்லாமல் இந்த பணி நடந்துள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச விமான நிலையங்களில்முன்னெடுக்கப்படும் பாதுகாப்புநடவடிக்கைகளை கட்டுநாயக்க விமான நிலையத்திலும் நடைமு-றைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அதற்கமைய, நுழைவு முனையத்தில் உள்ள ஸ்கேனர்கள் அகற்றப்பட்டு, கமெரா அமைப்புகள் மற்றும் விமான நிலைய பாதுகாப்புப் பணியாளர்கள் மூலம் தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் என கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (05)

# தீயில் எரிந்ததால் மர ஆலை நாசம்

## களுத்துறையில் சம்பவம்


மர ஆலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் மர ஆலையிலுள்ளமரப்பொருட்கள் அனைத்தும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக களுத்துறை பொலிஸார் தெரிவித்தனர் .

களுத்துறை - வஸ்கடுவ பகுதியில்உள்ளமர ஆலைஒன்றிலேயே வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணிக்கு குறித்த தீபரவல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து களுத்துறை மாநகர சபையின் இரு தீயணைப்பு வாகனங்கள் அந்துப் பகுதிக்கு அனுப்பப்பட்டதுடன் இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

குறித்த தீபரவலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)






OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர்
Kalaikkathir

# ஆட்சிக் கவிழ்ப்புச் சதியில் மக்கள் விடுதலை முன்னணி

## ஜனாதிபதி பகிரங்க குற்றச்சாட்டு



நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தி பொதுமக்களைவன்முறையாளர்களாக்கிஆட்சி கவிழ்ப்புசதியில் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான குழு ஈடுபட்டுள்ளது என ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கதெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி கூட்டத்தில் இதனை தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஆட்சிக் கவிழ்ப்பு சதி தொடர்பான புலனாய்வு அறிக்கை மற்றும் வீடியோ ஆதாரங்களையும் வெளியிட்ட அதேவேளை இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவை உருவாக்க இருக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டை போன்று மக்களை வன்முறையாளர்களாக்கி வீதியில் இறக்கி அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாடு ஒருநிலைக்கு வந்துள்ளது, மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் அதேநேரம் மக்களின் முழுமையான ஒத்துழைப்பும் அதற்கு கிடைத்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு பல்வேறு மக்கள் நலசார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் அதேநேரம் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு, அனைத்து வழிகளிலும் நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்ல முயற்சிகளைமுன்னெடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வறட்சியை காரணம் காட்டி மக்களை வன்முறைக்குள் தள்ளுவதற்கு இடமளிக்க முடியாது. விவசாயத்திற்கு தேவையான நீரை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (05)

## பவுஸர் – கார் விபத்து; 5 பேருக்குப் படுகாயம்

எரிபொருள்ஏற்றிச்சென்ற பவுஸரும், காரொன்றும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த ஐவர் படுகாயமடைந்துள்ளனர் என்று திம்புள்ள - பத்தன பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளங்கள் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் திம்புள்ள - பத்தனை சந்தியில் வைத்தே சனிக்கிழமை 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கார் வேகமாக செலுத்தப்பட்டுள்ளது எனவும் அதன் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார்எனவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த ஐவரும் நோர்வூட் பகுதியைச் சேர்ந்த 20 -30 வயதுக்கிடைப்பட்டவர்கள் என விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் திம்புள்ள - பத்தன பொலிஸார் தெரிவித்தார். (05)



## கெஹலியவுக்கு எதிராக கையெழுத்து வேட்டை

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக கையெழுத்துக்களை சேகரிக்கும் வேலைத்திட்டம் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த கையெழுத்துசேகரிப்புவேலைத்திட்டம்அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பத்தாயிரம் கையெழுத்துடன் கூடிய மனு சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (05)

## மலை உச்சிக்கு ஏறிய சுற்றுலாவி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து காயம்

எல்ல பிரதேசத்தில் உள்ள மலை உச்சி ஒன்றில் ஏறிக்கொண்டிருந்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த இந்த இளைஞருக்கு கால் உடைந்துள்ளதாக கருதப்படுகிறது.

இந்நிலையில், அவர் தியத்தலாவ ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எல்ல சுற்றுலா பொலிஸார், ஒட்டோ சாரதிகள் மற்றும் அருகில் உள்ள ஹோட்டல்களின் பணியாளர்கள் அடங்கிய குழுவினருடன் இணைந்து பிரித்தானிய சுற்றுலா பயணியை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். (05)

## சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் பெரியப்பா யாழில் கைதானார்

தனது வீட்டில் தங்கி இருந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் குறித்த சிறுமியின் பெரியப்பா கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் வறுமை காரணமாக 17 வயதான தனது மகளை, தந்தையின் அண்ணாவின் வீட்டில் பெற்றோர் தங்க வைத்துள்ளனர்.

இந்நிலையில் சிறுமியின் பெரிய தந்தை நீண்ட காலமாக சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி வந்துள்ளார்.

இதுகுறித்துசிறுமிதனது பெற்றோருக்குதெரியப்படுத்தியதை அடுத்து, சனிக்கிழமை பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலி-ஸார், சிறுமியின் பெரிய தந்தையை கைது செய்-துள்ளதுடன், சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

## வரட்சியான காலநிலைக்கு மத்தியில் எலிக்காய்ச்சல் நாட்டில் அதிகரிப்பு

### எச்சரிக்கும் பொதுச் சுகாதாரப் பிரிவு



தற்போது நிலவும்வரட்சியான காலநிலைக்கு மத்தியில்'எலிக்காய்ச்சல்' எனப்படும் லெப்டோஸ் பிரோசிஸ் பரவல் அதிகரிப்பதை இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டி எச்சரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் நபர்கள் குறிப்பாக, மீனவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமென சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

குருணாகல் ஹிரிபிட்டியவில் அமைந்துள்ள ரொடரட்ட வாவியில் நீராடிய இரு இளைஞர்கள் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்ததையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (05)



## வடக்கு மாகாணத்தில் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு

வடக்கு மாகாணத்தில் கடந்த சில மாதங்களாக ஒரு சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றஊடகசந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் -

வடபகுதியில்இருக்கின்ற வைத்தியசாலைகளில்மருந்து தட்டுப்பாடு காணப்படுகிறது. இருப்பினும் 90 விகிதத்துக்கு மேலான மருந்துகள் அதாவது முக்கியமான நோய்களுக்குறிய மருந்துகள் இருக்கின்றன.

திடீரென ஒரு சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்ற போது நோயாளிகள் சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள்.

குறிப்பாக சலரோகம், உயர்குருதி அழுத்தம் போன்றநோயாளிகள்பல்லா-யிரக்கணக்கானோர் எமது பகுதிகளில்இருக்கின்றார்கள். அவர்களுக்கான சிகிச்சை மருந்துகள்இருக்கின்றன,சில சமயங்களில் அவ்வாறான மருந்துகளுக்கும் கடந்த மாதங்களில் தட்டுப்பாடு ஏற்பட்ட போது குறிப்பிட்ட மருந்துகளை நோயாளிகள் மருந்தகங்களில் வாங்கி இருக்கின்றார்கள்.

மிகவும் துரதிஷ்டவசமாக மிக வறுமையானவர்கள் இந்த மருந்தை குறிப்பிட்ட மாதம் வாங்கி பாவிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அப்போது அவர்களுக்கு உதவி செய்வதற்கான உதவுகின்ற நடைமுறைகளை சிலர் செய்து வருகின்றார்கள். சிலர் பாதிக்கப்பட்டது வருந்தத்தக்கது. இருப்பினும் தற்போது சுகாதார அமைச்சின் கீழ் இந்த அதிக மான மருந்துகளை கிரமமாக தருவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இப்போது சத்திர சிகிச்சைகளுக்கான மருந்துகள் அண்மையில் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் இப்போது அதுவும் வந்த நிலையில் இருக்கின்றது.

ஆகவே பொதுமக்கள் இந்த அசௌகாரியத்தை எதிர்கொண்டு மருந்துகளை அவர்கள் கவனமாக பாவிக்க வேண்டும். குறிப்பாக நோய் ஒன்று வருவதை அவர்கள் தவித்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக அதிகளவானோர் விபத்துக்குள்ளாகின்றார்கள். இதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக இளைஞர்களும் வயது வந்தவர்களும் பல்வேறு தொற்றா நோய்களுக்கு உள்ளாகின்றார்கள்.

அதாவது சலரோகம், இருதய நோய், மாரடைப்பு ஏற்படுதல் போன்ற வியாதிக்கு உள்ளாகின்றார்கள். ஆகவே அவர்கள் அன்றாட அடிப்படையான நடைமு-றைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

குறிப்பாக அவர்கள் அவர்களுடைய உணவுப் பழக்கவழக்கத்தை பின்பற்ற வேண்டும், மற்றும் புகைத்தல் மதுபாவனை மற்றும் பல்வேறு நெருக்கடிகளில் இருந்து அவர்கள் விடுபட்டு கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (05)

## வாகன உதிரிப்பாகக் கடை தம்பலகாமத்தில் தீக்கிரை





(ஹஸ்பர்)

தம்பலகாமத்தில்வாகன உதிரிப்பாங்கள் விற்பனை நிலையம் ஒன்று நேற்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்து முற்றாகச்சாம்பரானது.

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கண்டி பிரதான வீதியில் உள்ள கடையே இவ்வாறு தீக்கிரையானது.

அதிகாலையில் கடை தீப்பற்றி எரிந்ததில் உள்ளே இருந்த டயர்கள் உட்பட வாகன உதிரிப் பாகங்கள் அனைத்தும் எரிந்து சாம்பராகின.

அரச பகுப்பாய்வு திணைக்களத்தினர் தீப்பிடிததற்கான காரணத்தை அறிய மாதிரிகளைச் சேகரித்துள்ளனர். இதுவரைக்கும் கடை தீப்பிடித்ததற்கான காரணம் அறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## அரசியலை சாக்கடை என்கிறார்கள்; சுத்தம் செய்ய யாரும் வருவதில்லை

### ஜீவன் கூறுகிறார்



பலர் அரசியலை சாக்கடைஎன்றுகூறுகின்றார்கள். ஆனால், அதனை சுத்தம் செய்வதற்கு யாரும் வருவதில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று பரிணாமங்களுடன் விஸ்தரித்து பல இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சி நெறிகளை வழங்கி நாட்டின் கொள்கை தீர்மானத்தில் சந்தர்ப்பத்தையும் வழங்கி வருகிறோம் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் 'கலை அமுத விழா 2023' கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ் வாறு கூறினார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமானஜீவன்தொண்டமானும், சிறப்பு அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் எம். ராமேஸ்வரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது தமிழ் கலை கலாசாரத்தை அடையாளப்படுத்தும் விதமாகவும் இலங்கையின் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கணத்தை பறைசாற்றும் வகையிலும் பல கலை நிகழ்ச்சிகள் கல்லூரி மாணவர்களினால் நிகழ்த்தப்பட்டன.

இந்நிகழ்வில் மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த பாடசாலை மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வின் போது உரையாற்றிய ஜீவன் தெரிவிக்கையில் -

பலர் அரசியலை சாக்கடைஎன்றுகூறுகின்றார்கள். ஆனால், அதனை சுத்தம் செய்வதற்கு யாரும் வருவதில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று பரிணாமங்களுடன் விஸ்தரித்து பல இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சி நெறிகளை வழங்கி நாட்டின் கொள்கை தீர்மானத்தில் சந்தர்ப்பத்தையும் வழங்கி வருகிறோம்.

ஜனாதிபதிஅவர்களுடன் மலையக மக்களின் அபிவிருத்திக்கான சந்திப்பு இடம்பெற்றது. ஆனால், எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக பிரதிநிதிகள் அதில் பங்குகொள்ளாதுதவிர்த்தனர்.

எமது மக்களின் அபிவிருத்திக்காக ஒன்றிணையாமல் தமது அரசியல் நோக்கத்துக்காக எமது மக்களைப் பிரித்தாள நினைத்து இவர்கள் மட்டுமல்லாது, எமது மக்களின் அபிலாகைளையும்புறந்தள்ளி உள்ளார்கள்.

கண்டி புனித சில்வஸ்டர் கல்லூரி இலங்கைக்கு இளம் தலைவர்களை உருவாக்குகின்றனர். இம்மகத்தான செயலில் நானும் இணைந்துகொள்வதுபெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. இக்கல்லூரி கட்டட வசதிகளையும் நவீன கற்றல் வசதிகளையும் எதிர்பார்த்து இருப்பதை நான் அறிந்தேன்.

அந்த வகையில், எனது அமைச்சின் நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி ஊடாக இக்கல்லூரிக்கு நவீன திறன் வகுப்பறை ஒன்றினையும் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் கட்டடத்தையும்வழங்கநான் தீர்மானித்துள்ளேன்.

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக உள்ள இப்பாடசாலை வளர்ச்சியில் நாம் என்றும் முன் நின்று செயற்படுவோம்.

இன அடையாளம் எமது உரிமை. சிலர் இதனை இனவாதமாக மாற்றுவதாலேயேஎமதுநாடு இவ்வாறான பொருளாதார வீழ்ச்சியை அடைந்தது. இளம் மக்கள் பிரதிநிதிகளாக நாம் இதனை மாற்றி அமைப்போம். என்றும் நாங்கள் உங்களுடன். - என்றார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2023இல் வெளியிடப்பெற்றது.